**பெருநகர சென்னை மாநகராட்சி**
**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண்.25** **நாள்: 23.02.2018**

**வேலங்காடு எரிவாயு மயானபூமியில் பராமரிப்பு பணிகள் நடைபெற உள்ளதால், வில்லிவாக்கம், அரும்பாக்கம் மற்றும் ஓட்டேரி எரிவாயு மயானபூமியை பயன்படுத்தி கொள்ளுமாறு பெருநகர சென்னை மாநகராட்சி அறிவிப்பு**

பெருநகர சென்னை மாநகராட்சி, பொதுசுகாதாரத்துறை, அண்ணாநகர் மண்டலம், வார்டு–**101**ல் உள்ள வேலங்காடு எரிவாயு மயானபூமியில், எரிவாயு தகனமேடையில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள வேண்டி இருந்ததால், **11.02.2018** முதல் **25.02.2018** வரை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்தது. மேலும், வேலங்காடு எரிவாயு மயானபூமியில் பராமரிப்பு பணிகள் இன்னும் நிறைவு பெறாத நிலையில் உள்ளதால், **02.03.2018** வரை மேலும் **5** நாட்கள் தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட உள்ளது

மேலும், பராமரிப்பு பணி நடைபெறும் நாட்களில் அருகில் உள்ள வில்லிவாக்கம், அரும்பாக்கம் மற்றும் ஓட்டேரி எரிவாயு மயானபூமியை பொதுமக்கள் பயன்படுத்திக் கொள்ளுமாறு தெரிவித்துக் கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு: துணை இயக்குநர்/மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**